(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருவாதவூர் மற்றும் வெள்ளலூரில் மதுரை தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கால்நடை செயற்கை முறை இனவிருத்தி கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1989–90-ல் புதிய கால்நடை மருந்தகங்கள் துவங்குவதற்கான கருத்துரு பரிசீலிக்கப் பட்டது. ஆனால் உத்தேச இடங்களின் பட்டியலில் மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம் திருவாதவூர் மற்றும் வெள்ளலூர் இடம் பெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் 13 ஆண்டுக் காலம் 15 ஆண்டுக் காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் 23 ஆம் தேதியி லிருந்து 31 ஆம் தேதி வரையில் உண்ணாவிரதம் இருப்பதாக குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருப்பதாக நோட்டீஸ், கொடுத்திருக்கிறார்கள் ; உண்ணாவிரதம் இருந்து கொண் டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமானது. அகில உலக எழுத்தறிவு ஆண்டிலே—13 ஆண்டு காலம் பணிபுரிந்த ஆசிரியர்கள் அவர்கள் ; அவர்களுக்கு இனி வேலைவாய்ப்பே கிடைக்காது. ஏனென்றால் 40 வயது தாண்டிவிட்டது. அதனால் வேலையே கிடைக்காது. ஆனால் அமைச்சரவர்கள் நிதிநிலைமை காரணம் என்று முன்னாலேயும் சொல்லி இருக்கிறார்கள் ; இப்போதும் சொன்னார்கள். ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் அவ்வளவு பேருக்கும் உடனே கொடுக்க முடியவில்லை என்று சொன்னாலும் கூட— ஆயிரத்து சொச்சம் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள் அந்த மாவட்டத்திலே—ஒரு தனி அதிகாரியை நியமனம் செய்து உண்மையிலேயே இந்த ஆசிரியர்கள் தேவைதானா, அங்கே மாணவர்கள் பயிலுகிறார்களா என்று பார்த்து, ஒரு

1990 ஆகஸ்ட் 21] [திரு. மா. சுந்தரதாஸ்]

'ஃபேஸ்ட் மேனர்' என்ற அடிப்படையில் 'இயர் பை இயர்' 50, 60 என்று 'போஸ்ட்ஸ்' கொடுத்தாவது அவர்களுடைய குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வருமா ? உண்மையிலேயே அங்கே மாணவர்கள் படிக்கிறார்கள் ; அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை என்றால் பிரச்சினை இல்லை. அங்கீகாரம் கொடுக்கப்பட்ட இளைநிலை ஆசிரியர்கள், ஹையர் செக்கண்டரி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 1,300 பேர் கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத்திரம் இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இதுபோல் தமிழகத்தின் மற்ற பகுதிகளிலும் இருப்பார்கள். ஆகவே, தயவுசெய்து நம்முடைய முதலமைச்சர் அவர்களும், கல்வியமைச்சர் அவர்களும் ஒரு 'பேஸ்ட் மேனர்' என்ற அடிப்படையில் படிப்படியாக 'போஸ்ட்ஸ் சாங்ஷன்' கொடுத்து அவர்களின் குறையை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ் நாட்டில் கல்விக்காக நிதி ஒதுக்கப்படுகிற அளவின் விகிதாச்சாரம் பல ஆண்டுகாலமாக உயர்ந்து கொண்டே வருகிறது. அப்படி உயர்ந்து கொண்டு வருகிற காரணத்தால் உதவி பெறுகிற தனியார் பள்ளிகளில் மேலும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்படுகிற போது அரசாங்கத்தினுடைய நிதி கொடுக்கப்படாமலே நிதி பெறுவதற்குத் தேவையில்லாமலே அவர்களாக ஆசிரியர்களை நியமித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆசிரியர்களை நியமிப்பது தவறு என்று அரசாங்கம் தெரிவிக்கவில்லை. அரசாங்கத்தினிடத்தில் அதற்கான நிதியைப் பெறுகிற உரிமையை வற்புறுத்தக் கூடாது என்ற அடிப்படையில் 10, 12 ஆண்டுக் காலமாக அப்படி தாங்களாகவே நியமித்துக் கொண்ட பணியிடங்களை ஒத்துக்கொண்டாலும் கூட அந்தப் பணிக்கான நிதியை ஒத்துக் கொள்ளாத நிலைமை நீடித்து விட்டது. அப்படி நீட்டித்த காரணத்தால் இன்றையதினம் அது பெரிய சுமையாக ஆகி இருக்கிறது. அதுபற்றி எந்த அடிப்படையில் அணுகுவது என்பதே புரியாத அளவுக்கு அது விரிந்து கொண்டு போய்விட்டது. அண்மைக் காலத்தில் அதாவது கடந்த மூன்றாண்டு காலமாக உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதாக இருந்தாலும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதாக இருந்தாலும் அந்த நிதிப் பொறுப்பை, சுமையை ஏற்றுக் கொண்டால் அந்தத் தனியார் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு நிதி இல்லை என்று தொடங்கி, இந்த ஆண்டு 5 ஆண்டுகள் அப்படி ஏற்றால்தான் ஒத்துக் கொள்ளலாம் என்று சொல்லி அப்படி அதையும் நிதியை பொறுத்தவரையிலே தள்ளி வைக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது என்றாலும் இந்தப் பிரச்சனையை

வேறு எந்த வகையில் அணுக முடியும் நெருங்க முடியும் என்பது தொடர்ந்து ஆராயப்படுகிறது.

(ஆ) உறுப்பினர்களுடைய சில இருக்கைகள் மாற்றம் செய்யப் பெற்றுள்ளது தொடர்பாக 20–8–1990 ஆம் நாளன்று தலைவர் அளித்துள்ள தீர்ப்பு குறித்து.

10-05, மணி

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நீங்கள் அளித்த அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் சபையிலிருந்து தூக்கி வெளியிலே போடுகிற அளவுக்கு ஒரு நிலையை உண்டாக்கி விட்டீர்கள்.

ஆனால் நேற்றைக்கு நீங்கள் வரும்போதே படித்த திருக்குறளை நான் பார்த்தபோது அந்தத் திருக்குறளுக்கு அடுத்த திருக்குறள்

" வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு "

என்ற ஒரு திருக்குறளும், அதற்கடுத்து

" உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைத் தற்று "

என்ற திருக்குறளும் இருக்கிறது என்ற அடிப்படையிலே தான் எங்கள் கட்சியிலே நாங்கள் எடுத்த நடவடிக்கையை எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர், கட்சிக்கு உகந்தது என்று நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையை, பேரவைத் தலைவர் என்ற முறையில் உங்களுக்கு அனுப்பி வைத்து, எங்கள் கட்சியிலிருந்து நீக்கப் பட்டவர்களை நீங்கள் தனியாக உட்கார வைக்க வேண்டும், பிரித்து உட்கார வைக்க வேண்டுமென்று கேட்டிருப்பது, எங்களுக்கிருக்கிற உரிமையாகும். (குறுக்கீடு) (மணியடிக்கப் பெற்றது)

..

தலைவர் அவர்களே, அந்த வகையில் இன்றைக்கு நாங்கள் உங்களைத் தலைவராக ஏற்று, இங்கே உட்கார்ந்து பணியாற்றுகிறோம். நீங்கள் ஒரு தீர்ப்பை அளித்தால், தாங்கள் அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது